OS: 269/2019

Date: 18.01.2024

பெயர் :அசோக்குமார்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>- 1 ம் பிரதிவாதி தரப்பில்

வழக்கு எந்த புல எண்ணுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 387/2B க்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண். 387/2B தவிர வேறு சர்வே எண்கள் குறிப்பிட்டு வழக்கு சொத்து விவரத்தில் காட்டியுள்ளேனா என்றால் வண்டி தடபகுதியானது சர்வே எண்.387/2A ல் வருகிறது அதை குறிப்பிட்டுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், சர்வே எண்.387/2A ஐ பொருத்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மேற்கு பகுதியில் சர்வே எண்கள். 387/1, 387/3 ஆகிய இரண்டு சர்வே எண்கள் உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு சர்வே எண்களையும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்திற்கு தென் புறத்தில் சர்வே எண்.387/4 என்ற ஒரு வண்டி பாதை உள்ளது என்று சொன்னால் சரியல்ல, வடபுறத்தில்தான் உள்ளது. சர்வே எண்.387/4 ல் உள்ள வண்டிபாதை சர்வே எண்.380 என்ற இடம் வரை வண்டிபாதை செல்கிறது என்று சொன்னால் சரியல்ல, அந்த ரோடானது 46 செண்ட் அமைந்துள்ள சர்வே எண்.387/2A க்குத்தான் செல்கிறது. வழக்கு சொத்து விவரத்தில் சர்வே எண்.387/2B க்கு வடக்கில் வண்டிதடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வண்டிதடமானது 1 ம் பிரதிவாதி வெங்கடேசனுக்கு தனிப்பட்ட உரிமை மேற்படி வண்டி தடத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா ஆகியவைகளில் 1 ம் பிரதிவாதி பெயர்தான் வண்டி தடத்திற்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.387/2A ல் உள்ள வண்டிதடமானது எனது முன்னோர்கள் மேற்படி பாதையை பயன்படுத்தி வந்ததாக நான் சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனோ என்றால் இல்லை, 1973 பத்திரம் மட்டும் கொடுத்துள்ளேன். நான் கூறுவதுபோல் மேற்படி 1973 பத்திரத்தில் வண்டிதடம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.387/2A ல் உள்ள வண்டிதடம் குறித்து வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா ஆகியவை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, கொடுத்துள்ளேன். நான் சொல்வது போல் மேற்படி வருவாய்

ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.387/4 ல் உள்ள வண்டிதடம் தான் பொதுவில் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சர்வே எண்.387/4 ல் உள்ள பாதை வழியாகத்தான் சர்வே எண்.380 க்கு காலகாலமாக சென்று வந்தார்கள் என்றும், தற்போதும் அதன்படியே நானும் பயன்படுத்தவேண்டும் என்று சொன்னால் சரியல்ல, காலங்காலமாக சர்வே எண்.387/2A ல் தான் சென்று வந்தோம். சர்வே எண்.387/2A உள்ள பூமியை பொருத்து 1 ம் பிரதிவாதி தென்னை மரங்கள் வைத்து பராமரித்தும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து தடத்திற்கு பாதியை விட்டு விட்டு மீதியை அனுபவித்து வருகிறார்கள். நான் தாவா தாக்கல் செய்துள்ளது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு மட்டுமே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி வண்டிபாதை குறித்து எனக்கு பாத்தியப்பட்டது என வசிதியுரிமை படி அத்தியாவசிய தேவைகள் குறித்து எதன் அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்று வழக்குரையில் பரிகாரங்கள் கேட்டுள்ளேன் மேற்படி ஈஸ்மெண்ட் பை கிரேண்ட், ஈஸ்மெண்ட் பை நெசசிட்டி இரண்டு பரிகாரங்களையும் ஒரே பரிகாரங்களாக கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்குரையில் தாவா வண்டிபாதையானது எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்காமலேயே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.387/2A ல் உள்ள பாதை 1 ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியபட்டது என்று பதிலுரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கு பின்பும் விளம்புகை கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் விளம்புகை பரிகாரம் கேட்கமுடியாது என்றும், அதற்கான காலவரையறைகள் அனைத்தும் முடிந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் நான் கேட்டுள்ள பரிகாரங்களை பொருத்து தாவா சொத்துக்கான உரிமைமூலமே பிரச்சனையாக உள்ள நிலையில் நான் தாவாவில் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவா தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:- இல்லை.

ஒப்பம்/-PW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.